நாள்.11.07.2025.

EP No.8/2014 in OS 267/2004

எ மா சா.1

பெயர். ஆறுமுகம்

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

விசாரணை நீதிமன்றத்தில் பிறப்பிக்கபட்ட தீர்ப்புரைக்கு எதிராக மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் ஞாபகம் இல்லை. சொத்து விவரம் தவறு என்று தற்போது கட்சி செய்தது போல் பிரதான வழக்கிலும் அவ்வாறே கட்சி செய்தேன் என்றால் சரிதான். பிரதான வழக்கில் தபசில் சொத்து விவரம் சரி என்று தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது அது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. விசாரணை நீதிமன்றத்தில் கொடுக்கபட்ட தீர்ப்புரையை படித்து பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

வாதி கோவில் தாக்கல் செய்த வழக்கு 21 வருடங்களாக நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். வாதி திருக்கோவில் நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பின் அடிப்படையில் தபசில் சொத்தை வாழ்விப்பு கொடுக்காமல் இருப்பதற்காக நிறைவேற்றுதல் மனுவில் பொய் கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் நிறைவேற்றுதல் மனுவில் செய்யும் கட்சி ஏற்கனவே பிரதான வழக்கில் முடிவு செய்யபட்டது என்று சொன்னால் சரியல்ல. அதனால் மனுதாரர் மனுவில் கோரியவாறு உத்தரவு செலவு தொகையுடன் பிறப்பிக்ககூடியது என்றால் சரியல்ல.

MANJULA C

Digitally signed by MANJULA C
Date: 2025.07.12 11:31:21 +0530